# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு | 07 டிசம்பர் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்: திருஅவை (இரக்கமுள்ளது)
சார்பு உணர்வை வளர்க்கவும், நற்செய்தியை அறிவிக்க அதிகாரம் அளிக்கவும் அழைப்பு

# நிறைவான அமைதியின் திருவருகைக்காலம்

எசாயாவின் தூரநோக்கிற்கும் யோவானின் முன்னறிவிப்பிற்கும் இடையில், கடவுளின் மீட்புத்திட்டம் மற்றும் முன்னறிவிப்பு நிறைவேறுவதின் தொடர்ச்சியை நாம் காண்கிறோம். வரவிருக்கும் இளந்தளிர் யார், அவருடைய ஆட்சி எவ்வாறு இருக்கும் என்பதற்கான தெளிவான விளக்கத்தை எசாயா விளக்குகிறார். இறந்துபோன ஈசாயின் அடிமரத்தின் வேரிலிருந்து ஒரு மொட்டு மலர்கிறது. உண்மையில் கடவுள் தரிசு நிலத்திலிருந்து கூட செயல்படுகிறார்.




ஏனெனில் இந்தக் காலத்தில் தாவீதின் அரசு இனி இல்லை. அது ஒரு அடிமரமாகக் குறைந்துவிட்டது. ஆயினும் ஈசாயின் மகனான தாவீது அரசரின் சந்ததியிலிருந்து மெசியா வருகிறார்.

மெசியா எவ்வாறு ஆவியால் நிரப்பப் பட்டிருப்பார் என்பதை எசாயாவின் இறைவாக்கினரின் முன்னறிவிப்பு காட்டுகிறது. ஆண்டவரின் ஆவி மெசியாவின் மீது தங்கியிருப்பதால், அவர் அதிகாரம் அளிப்பதற்கும், வழிநடத்துவதற்கும் இணைந்து செயல்படும் வெளிப்பாடுகளை அவர் காண்கிறார். கடவுளின் ஆட்சி நிறைவான நீதியால் காட்டப்படும். குறிப்பாக, மிகவும் பாதிப்புக்குள்ளானோருக்கு நீதி அருளப்படும். ஏழைகளும் எளியோரும் அவர்களுடைய நீதிக்காகத் தேடிக்கொண்டிருந்த நடுவரைக் கண்டுகொள்வர்.

நாம் நீதிக்காகப் பாடுபடும்போதும், விளிம்புநிலையில் இருப்போரை ஆதரிக்கும்போதும், எசாயாவின் முன்னறிவிப்பு நமக்கு நம்பிக்கையைத் தருகிறது. நம்பிக்கையைவிட இறைவாக்கினர் நமக்கு ஒரு அமைதியின் அரசைக் காட்டுகிறார். நிறைவாக, அனைத்தும் ஒன்றிணையும். கொள்ளையடிக்கும் படைப்பின் இயல்புத்தன்மை ஒப்புரவாகும். துப்பாக்கி வன்முறை, அர்த்தமற்ற கொலைகள், போர்கள், கைவிடப்பட்ட குழந்தைகள், யாருமற்ற அனாதைகள், முதியவர்கள் இவைபோன்ற ஏதுமில்லாத தீங்கிலிருந்து பாதுகாக்கப்பட்ட ஓர் உலகத்தைக் கற்பனை செய்துபாருங்கள். அமைதி நிலவும். ஏனெனில், ‘கடலை நீர் மூடுவதுபோல, இந்த உலகம் ஆண்டவரைப் பற்றிய அறிவால் நிரப்பப்படும்.’

நாம் சிந்திக்க எடுத்துக்கொள்ளும் கருத்துகளாக, திருமுழுக்கு யோவானின் காட்சி நம்மை ஒரு துரித நிலைக்கு எடுத்துச் செல்கிறது. எசாயாவின் முன்னறிவிப்பு மற்றும் யோவான் தம்முடைய தலைமுறையைப் பார்க்கும்போதும் அவர் தரும் செய்தி மிகவும் பசுமையானது. “விண்ணரசு நெருங்கிவிட்டது, மனம் மாறுங்கள்” முற்காலத்தில் எழுதப்பட்டவை அனைத்தும் நமக்கு அறிவுரையாகவே எழுதப்பட்டன. மறைநூல் தரும் மன உறுதியினாலும் ஊக்கத்தினாலும் எதிர்நோக்கு உண்டாகிறது என்று புனித பவுல் நமக்குக் கூறுகிறார்.

திருவருகைக் காலத்தின் இந்த இரண்டாம் ஞாயிறில் நாம் கருத்தில் கொள்ள வேண்டியவை: அமைதி என்பது ஒரு செயலற்ற நிலை அல்ல மாறாக ஒவ்வொரு நபரிடமிருந்தும் தொடங்கும் ஒரு செயலில் அது தொடங்குகிறது. முதலில் அதை நம் குடும்பத்திலிருந்தும், அதிச க்கள், திருஅவை சமூகம் மற்றும் நம்முடன் பணிபுரிவோர் மற்றும் பெரிய சமூகம் என்னும் அடித்தளத்திலிருந்து தொடங்குவோம்.

ஒருவருக்கொருவர் திருவருகைக்காலத்தின் நிறைவான அமைதியின் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வோம்.

> இரக்கம் என்பது திருஅவை வாழ்க்கையின் அடித்தளம். திருஅவையின் நம்பகத்தன்மை. அது எவ்வாறு இரக்கமுள்ள மற்றும் இறைஇரக்க அன்பைக் காட்டுகிறது என்பதில் காட்டப்படுகிறது.
>
> *- திருத்தந்தை பிரான்சிஸ்*

### இன்றைய இறைவார்த்தை:

எசாயா 11: 1-10

திருப்பாடல் 72: 1-2, 7-8, 12-13, 17

உரோமையர் 15: 4-9

மத்தேயு 3: 1-12

INTERNAL CIRCULATION ONLY
BUL 49/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org